# <u>அவசரகூட்டப்பொருட்கள்</u>

1.தமிழ்நாடுஒருங்கிணைக்கப்பட்டவளர்ச்சி மற்றும் கட்டடவிதிகள் 2019 அரசாணைநிலை எண்.18, நகரளவைநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ((MAI) துறை நாள்.04.02.2019 இன் படி வெளியிடப்பட்டஅரசாணைமற்றும் விதிகள்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**–அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.953/2019/எப்1

**தீர்மானம் எண்.65– அங்கீகரிக்கப்பட்டது.**

2. இந்நகராட்சியில் மத்திய மற்றும் மாநிலஅரசுகளின் ஒருங்கிணைந்த நிதிஉதவியுடன் செயல்பட்டுவரும் அம்ரூத் (AMRUT) 2017–2020 திட்டத்தின் கீழ் ராஜுவ் நகர் பூங்கா, அபிவிருத்திபணியினை திரு.ஆர்.குமார் என்பவரின் குறைந்தஒப்பந்தப்புள்ளியினை ஏற்று 03.05.2018–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படிஉத்தரவு வழங்கி 5 மாதம் முடிந்த பின்னரும் ஒப்பந்தக்காரர் பணியினை முடிக்கவில்லை.

பார்வையில் கண்டஅறிவிப்பு மூலம் ஒப்பந்தக்காரரை பணிமுடிக்க அறிவுறுத்தப்பட்டது. உதவி பொறியாளர், பொறியாளர் ஆகியோரால் நேரில் ஒப்பந்தக்காரரிடம் பணியினை முடிக்க அறிவுறுத்தப்பட்டது. இருப்பினும் மேற்படி பணியினை ஒப்பந்தக்காரர் திரு.ஆர்.குமார் பணியினைமுடிக்கவில்லை. மேற்படி 30 நாட்களுக்குள் முடிக்கப்படவேண்டும் என்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டதை வேலைஉத்தரவு நிபந்தனைகளில்வரிசை எண்.2–ல் வலியுறுத்தப்பட்டது. இருப்பினும் குறித்த காலத்திற்குள் பணியை ஆரம்பித்து முடிக்காததால் மேற்படி திட்டபணியானது உரியகாலத்தில் முடிக்கப்படவில்லை எனஅரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை ஆய்வின் போது வன்மையாக கண்டிக்கப்பட்டது. அதனால் நகராட்சிக்குஅவப்பெயர் ஏற்பட்டதை தொடர்ந்து 28.08.2018 தேதிய அறிவிப்பில் 31.08.2018–ம் தேதிக்கு முன்னர் மேற்படி பூங்கா பணியினை முடித்து நகராட்சி வசம் ஒப்படைக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

தவறும்பட்சத்தில், வருங்காலங்களில் நகராட்சிகளில் நடைபெறம் ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்துகொள்ள தடைவிதிக்கப்படும் எனவும் ஒப்பந்தக்காரர் கறுப்புபட்டியலில் சேர்த்து உத்தரவு வழங்கப்பட்டு சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிப்புவழங்கப்பட்டது.

மேற்படி பணிமுடிக்கப்படாமல் 06.09.2018–ம் தேதிய கடிதத்தில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்பட்டதாலும் 70% பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாகவும் ஒப்பந்தக்காரரால் தெரிவிக்கப்பட்டது. மேற்படி பதில் ஏற்று கொள்ளும் வகையில் இல்லை. மேலும் பணியானது 10.11.2018–ல் தான் முடிக்கப்பட்டது.

பணி ஆரம்பிக்கும் காலத்திலிருந்தே தங்களுக்கு அறிவிப்புகள் வழங்கியும் நேரில் மற்றும் தொலைபேசியில் அவ்வப்போது வலியுறுத்தியும் பணிகாலதாமதமாக முடிக்கப்பட்டது. அதனால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது.

மேலும் மதிப்பீடு எண்.108/2014–15–ல் ரூ.7,00,000/–ம் மதிப்பீட்டில் நீதிமன்றசாலை, பேலஸ் ரோடு மற்றும் காலேஜ் சாலை ஆகிய பகுதிகளில் ஒட்டுபணிகள் செய்வதற்கான பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் பணிதரமாக இல்லையென தெரிவித்து அதற்கான பட்டியல் தொகை இது நாள் வரைவழங்கப்படவில்லை.

மேலும் N.U.H.M திட்டத்தின் கீழ்தொல்லவிளை மருத்துவமனை கட்டிடபணிக்கான ஒப்பந்தப்புள்ளி அவருக்கு கிடைக்காததால் அதனை ஆட்சேபனை செய்து சென்னைஉயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.202 of 2016 date 29.01.2016 தீர்ப்பில் திரு.ஆர்.குமார், ஒப்பந்தக்காரரின் செயல்பாடுகளைகண்டித்து ரூ.50,000/–ம் அபராதம் விதித்து அவரது ஒப்பந்த உரிமத்தினை பரிசீலனை செய்து முடிவு செய்யவும் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மேற்படி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்த உரிமத்தை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

மேலும் ஆர்.குமார், ஒப்பந்ததாரர் பெயரைநகராட்சியின் ஒப்பந்ததாரர் கருப்புபட்டியலில் சேர்த்து இனிவரும் காலங்களில் இவர் எவ்வித ஒப்பந்தபணிகளிலும் நகராட்சியில் மேற்க்கொள்ளாமல் இருக்கவும் அங்கீகாரத்திற்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**–அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.4555/2019/இ4

**தீர்மானம் எண். 66– அங்கீகரிக்கப்பட்டது.**

**3.** நாகர்கோவில் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டபணிகள் (AMRUT) நடைபெற்றுவருவதில் **11** இடங்களில் மேல்நிலைநீர்தேக்கம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டதில் நகராட்சிக்கு உட்பட்ட ஆசீர்வாதம் நகரில் மேல்நிலை நீர் தேக்கதொட்டி கட்டுவதற்கு தேவைபடும் இடத்தில் ஒரு பகுதியாக நகராட்சிக்கு சொந்தமான பகுதிக்கு மேல்நிலை நீர் தேக்கம் கட்டப்படும் அருகில் உள்ள திரு.பிரைட் அவர்களுக்கு சொந்தமான சர்வே எண்.**33/4** மனையில் **11/2** சென்ட் இடம் தேர்வு செய்து வழங்க கேட்கப்பட்டதற்கு சம்மதம் தெரிவித்தன் அடிப்படையில் அவ்விடத்துக்குமாற்றாக வேறு இடமோ அல்லது அவ்விடத்துக்கான வழிகாட்டி மதிப்பின் படி (Guideline value) தொகை வழங்கலாம்.

பொது மக்கள் நலனைகருத்தில் கொண்டு நகராட்சிக்கு இடம் வழங்கும் திரு.பிரைட் அவர்களின் நல் உள்ளத்திற்கு நாகர்கோவில் நகராட்சி சார்பில் பாராட்டுகளை தெரிவித்து பதிவுசெய்யலாம்.

**<u>அலுவலக குறிப்பு</u>**–அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.22185/2018/இ3

**தீர்மானம் எண். 67– அங்கீகரிக்கப்பட்டது.**